சார்பு நீதிமன்றம், பொள்ளாச்சி

மனு எண். எம்.சி.ஓ.பி. 165/2017

PW - 2

2024 ம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் 09 ம் நாள் வெள்ளிக்கிழமை (1989 ம் ஆண்டின் 44 வது சட்டத்தின் ஏற்பாட்டின்படி) திருமதி.பி.மோகனவள்ளி, பி.ஏ., எம்.எல்., சார்பு நீதிபதி, பொள்ளாச்சி அவர்களால் ஆணையிட்டு பிரமாணம் செய்து வைக்கப்பட்டது.

| | |
|---|---|
| பெயர் | பத்மநாபன் |
| க.பெ. (அ) த.பெ. | நாரயணசாமி |
| வயது | 66 |
| முகவரி | போடிப்பட்டி |

**முதல் விசாரணை**

நான் இம்மனுவில் மனுதாரரர் தரப்பு சாட்சி ஆவேன். எனது தரப்பு சாட்சியத்தை நான் சத்தியப்பிரமாணமாக தாக்கல் செய்துள்ளேன். அதில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான்.

1.மசாஆ 29 எனது ஆதார் அட்டை நகல் (அசலுடன் ஒப்பிட்டுப்பார்க்கப்பட்டது),

எனவே எனது தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்களை ஏற்று மனுப்படி உத்தரவாக வேண்டுகிறேன்.

**<u>2 ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

விபத்து ஏற்படுத்திய வாகனத்தின் பதிவு எண்.TN 37 BC 2844 ஆகும். போலீசார் என்னை விசாரித்தார்கள். போலிசார் வழக்கில் நான் எத்தனையாவது சாட்சி என தெரியவில்லை. சாட்சியிடம் குற்றப்பத்திரிக்கை காட்டப்பட்டது. அதில் சாட்சி பட்டியலில் என் பெயர் இல்லை ஆனால் போலிசார் என்னை விசாரித்தார்கள். மோட்டார் வாகன ஆய்வாளர் அறிக்கையில் டயர் வெடிக்கவில்லை என்றும் நல்ல நிலையில் இருப்பதாக சொல்லப்பட்டுள்ளது என்றால் சரியல்ல, நான் பார்த்தபோது டயர் வெடித்தது. சாட்சியம் அளிக்க புஷ்பவள்ளி தான் அழைத்தார். நான் விபத்தை நேரில் பார்க்கவில்லை என்றாலும் டயர் வெடிக்கவில்லை என்றாலும் நான் வழக்கிற்காக பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

இச்சாட்சியம் என் முன்பு நீதிமன்றத்தில் பதிவு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு அது சரி என்று அவரால் ஏற்றுக் கொள்ளப்பட்டது.

சார்பு நீதிபதி

பொள்ளாச்சி